Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 54 | * ஓசை 38 | உள்ளூர் - 07.02.2026 | சனி | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 54 | * Issue 38 | வெளியூர் - 08.02.2026 | ஞாயிறு | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

மணி பிளான்ட்டில் இந்த பொருளை வைத்தால் அதிர்ஷ்டம்!

பி.எஸ்.என்.எல். 120 காலியிடங்கள்

இந்தியா மீதான 25% வரியை ரத்து டிரம்ப்!

தவெக விருப்ப மனு - நேரில் வர வேண்டாம்

# கோவை மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு திட்டம்: 9-ந்தேதி முதலமைச்சர் தொடங்கி வைக்கிறார்!

கோவை, பிப். 07–

தமிழ்நாடு முழுவதும் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் செய்யப்பட்டு வருகிறது.

அந்த வகையில் தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.



அதன் ஒருபகுதியாக கோவை மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு இந்ததிட்டம், வருகிற 9–ந் தேதி (திங்கட்கிழமை) தொடங்கி வைக்கப்படுகிறது.

இதனை முதலமைச்சர் மு,க.ஸ்டாலின் சென்னையில் இருந்து காணொளி காட்சி மூலம் தொடங்கி வைக்கிறார்.

கோவை மாநகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 5 மண்டலத்திற்கு உட்பட்ட 100 வார்டுகளில், பணிபுரியும் பணியாளர்கள் இதன் மூலம் பயன்பெற உள்ளனர். நிரந்தர, தூய்மை பணியாளர்கள், ஒப்பந்த தூய்மை பணியாளர்கள், ஓட்டுநர்கள், கொசு ஒழிப்பு பணியாளர்கள், மழைநீர் வடிகால் சுத்தம் செய்யும் பணியாளர்கள், பள்ளிகள் மற்றும் வார்டுகளில் கழிவறை பராமரிக்கும் பணியாளர்கள் என மொத்தம் 9 ஆயிரத்து 454 பணியாளர்கள் பயன்பெற உள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இத்திட்டத்தை தொடங்கி வைத்ததும் ஒவ்வொரு நாளும் காலையில் பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கப்படும். இந்த தகவலை மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

# தங்க நகை கடன்கள்: ரிசர்வ் வங்கி வெளியிட்ட முக்கிய அறிவிப்பு!!

டெல்லி, பிப். 07–

இந்தியாவில் 2024 டிசம்பரில் தங்க நகைகடன்கள் அளவு 1.68 டிரில்லியன் ரூபாயாக இருந்தது. அதுவே 2025 டிசம்பரி 3.82 டிரில்லியன் ரூபாயாக 127 சதவீதம் அதிகரித்துள்ளது. தங்கம் விலை அதிகரித்ததால் ஏராளமான மக்கள் தனிநபர் கடன்களுக்கு மாற்றாக அதிகமாக தங்க நகை கடன்களை வாங்குகிறார்கள். ஏனெனில் விலை உயர்வால் நம் கைவசம் இருக்கும் தங்கத்திற்கே முன்பை விட அதிக அளவு கடன் தொகை கிடைக்கிறது, தனிநபர் கடன்களை விட தங்க நகை கடன்களில் வட்டி விகிதம் குறைவு. இந்த சூழலில் நாட்டில் அதிகரித்து வரும் தங்க கடன்கள் குறித்தும் , தங்க நகை கடன் மதிப்பை நிர்ணயம் செய்யும் loan to value எனப்படும் LTV ரேஷியோ விகிதம் குறித்தும் ரிசர்வ் வங்கி ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா முக்கியமான ஒரு தகவலை வெளியிட்டு இருக்கிறார்.





2 நாட்கள் நடந்த நிதி கொள்கை கூட்டத்தில் நாட்டில் தங்க நகை கடன்களின் அளவு, அதில் எவ்வளவு கடன் வழங்கப்பட்டிருக்கிறது, எவ்வளவு பணம் நிலுவையில் இருக்கிறது, வங்கிகள் வசம் எவ்வளவு தங்கம் இருக்கிறது என்பது குறித்து எல்லாம் விரிவான ஆய்வு நடத்தப்பட்டதாக சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்திருக்கிறார். தங்க கடன் விவகாரத்தில் தற்போது எந்த ஒரு கவலையும் நம் கொள்ள தேவை இல்லை என சுட்டிக்காட்டி இருக்கிறார். ஏனெனில் கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்தியாவில் தங்க நகை கடன் வாங்கும் அளவு இரண்டு மடங்கு அதிகரித்திருக்கிறது, அதே வேளையில் தங்கத்தின் விலையும் உயர்ந்திருக்கிறது என்பதால் அது பற்றி தற்போதைக்கு கவலை கொள்ள தேவையில்லை என்கிறார்.

தங்கத்தின் விலையில் அதிகபட்சம் 85 சதவீதம் வரையிலான தொகையை கடனாக வழங்கலாம் என அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. பெரும்பாலான நிதி நிறுவனங்களும் வங்கிகளும் அனுமதிக்கப்பட்ட அளவைவிட குறைவான விகிதத்தில் தான் எல்டிவி ரேஷியோவை பயன்படுத்தி கடன் வழங்குகின்றன என கூறியுள்ளார். எனவே தங்க கடன்கள் அதிகரிப்பதும் தங்கம் விலையில் உள்ள ஏற்ற இறக்கமும் எந்த பாதிப்பை ஏற்படுத்தாது என்கிறார்.

தற்போது பெரும்பாலான வங்கிகள், நிதி நிறுவனங்கள் 70%க்கும் கீழ் தான் தங்கத்தின் மதிப்பின் கடனாக வழங்குகின்றன. அதாவது ஒரு கிராம் தங்கத்தின் விலையில் 70% வரை தான் கடன் தொகையாக வழங்கப்படுகிறது. எனவே தான் ரிசர்வ் வங்கி இது குறித்து எந்த மாற்றத்தையும் கொண்டு வரவில்லை. இதற்கிடையே ஆயிரத்துக்கும் அதிகமான கிளைகளை திறப்பதற்கு முன்பாக வங்கி சாராத நிதி நிறுவனங்கள் ரிசர்வ் வங்கியின் முன் அனுமதியை பெறுவது இதற்கு முன்பு இருந்த கடுமையான விதிமுறைகள் எளிமையாக்கப்பட்டுள்ளன. எனவே வங்கி சாராத நிதி நிறுவனங்கள் ஆயிரம் கிளைகளுக்கு மேல் தங்களுடைய கடன் வழங்கும் கிளைகளை திறப்பதற்கு ரிசர்வ் வங்கியின் அனுமதிக்காக காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. இதற்கு முன்பு இந்த நிறுவனங்கள் ரிசர்வ் வங்கியிடம் விண்ணப்பம் செய்து பல மாதங்கள் காத்திருக்க வேண்டும் பல்வேறு ஆய்வுகளுக்கு பிறகு தான் ரிசர்வ் வங்கி இந்த அனுமதியை வழங்கும். தற்போது இந்த விதிமுறை தளர்த்தப்பட்டுள்ளது.

எனவே இந்தியாவில் மேற்கொண்டு வங்கி சாராத நிதி நிறுவனங்கள் வளர்ச்சி அடைவதற்கும், தங்க நகை கடன் வழங்கக்கூடிய கிளைகள் மேம்படுவதற்கும் இந்த மாற்றம் உதவும். ரிசர்வ் வங்கியின் இந்த அறிவிப்பால் முத்தூட் பைனான்ஸ், மணப்புரம் பைனான்ஸ் போன்ற தங்க கடன் வழங்கக்கூடிய நிறுவனங்கள் பெரிய அளவில் பலனடைய இருக்கின.

# கூட்டணியில் குழப்பம் நீடிக்க தி.மு.க.தான் காரணம்- கார்த்தி சிதம்பரம் எம்.பி!

புதுக்கோட்டை, பிப். 07–

புதுக்கோட்டை மாநகராட்சிக்கு உட்பட்ட பெரியார் நகரில் உள்ள காங்கிரஸ் கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் கார்த்திக் சிதம்பரம் எம்.பி. நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.



அப்போது அவர் கூறியதாவது:–

நாடாளுமன்றத்தில் ஒன்றுமே நடக்கவில்லை அது தான் உண்மை. எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, முன்னாள் ராணுவ தளபதி எழுதிய புத்தகத்தை மேற்கோள்காட்டி பேச முயன்றபோது, ஆளும்கட்சி உறுப்பினர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் பாராளுமன்றம் முடங்கி கிடக்கிறது.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேச அனுமதிக்க வேண்டும். ஆனால் எதிர்கட்சி தலைவரை கூட பேச அனுமதிக்கவில்லை. பிரதமருக்கு பாதுகாப்பு இல்லை என்றால் அது குறித்து விசாரிக்க ஏன் இதுவரையில் குழு அமைக்கவில்லை? அது போன்ற பிரச்சினை ஏதும் நாடாளுமன்றத்தில் நடைபெறவில்லை.

தி.மு.க., காங்கிரஸ் ஆகிய இரண்டு பேரும் ஒன்றாக இருந்தால் தான் இரண்டு பேரும் வெற்றி பெற முடியும் என்பது என் கருத்து. இரண்டு மாதங்களாக காங்கிரஸ் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் பேசி வருவதும், குழப்பமான நிலை நீடிப்பதற்கும் தி.மு.க. குழு அமைக்காதது தான் காரணம்.

தி.மு.க., காங்கிரஸ் இடையே இப்போது உள்ள மணக்கசப்பிற்கு தி.மு.க.வே காரணம். கூட்டணி பேச்சுவார்த்தைக்கு குழு அமைத்திருந்தால் இதுபோன்ற சர்ச்சை கருத்துக்கள் ஒருபோதும் வந்திருக்காது. இனியும் தாமதிக்காமல் பேச்சுவார்த்தை குழுவை தி.மு.க. அமைக்க வேண்டும். இல்லையென்றால் மனக்கசப்புகள் மேலும் அதிகமாகத் தான் செய்யும்.

ராகுல் காந்தியை கனிமொழி சந்தித்து பத்து நாட்களுக்கு மேலாகியும் அதன் பிறகும் கூட்டணிக்கு தி.மு.க. பேச்சுவார்த்தை குழு அமைக்காதது எதற்காக என்பது தெரியவில்லை. ஏதாவது ஒரு முடிவை தி.மு.க. உடனடியாக எடுக்க வேண்டும். தி.மு.க குழு அமைத்து பேசிவிட்டால் இந்த பிரச்சினை முடிவுக்கு வரும்.

1967–க்கு பின்னர் நாங்கள் ஆட்சியில் இல்லை தான், தனித்து நிற்க கூடிய பலம் இல்லை தான். அதேவேளையில் நாங்கள் இருக்கும் கூட்டணி தான் பலமான கூட்டணியாக ஆட்சி அமைக்கும். காங்கிரஸ் கட்சி இருந்தால்தான் அந்தக் கூட்டணிக்கு மதச்சார்பின்மை முத்திரை குத்தப்படும். அப்போதுதான் தி.மு.க. மதசார்பற்ற கூட்டணி என்று கூறிக்கொள்ள முடியும். எங்களை கூட்டலாக பார்க்க கூடாது, பெருக்கலாக பார்க்க வேண்டும்.

அ.தி.மு.க அரசு ஒருவேளை அமைந்தால், அது அ.தி.மு.க. அரசாக இருக்காது, பா.ஜ.க. ஆட்சியாகத்தான் இருக்கும். தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய்க்கு என்று ரசிகர்கள் உள்ளனர். அந்த ரசிகர்கள் தொண்டர்களாக மாறலாம், தொண்டர்கள் வாக்களிக்கலாம். தமிழக வெற்றிக்கழகத்திற்கு என்று ஒரு வாக்கு வங்கி இருக்கிறது என்பதும், விஜய்க்கு ஆதரவு இருக்கிறது என்பதும் உண்மை.

அந்த வாக்குகளால் தொகுதிகளில் தமிழக வெற்றிக் கழகம் வெற்றி பெற்று அது சீட்டாக மாறுமா என்பது கேள்விக் குறிதான். தமிழக வெற்றிக் கழகம் தற்போது களத்தில் சுறுசுறுப்பாக உள்ளது. விஜய் மீது வருமான வரி துறையின் தீர்ப்பு என்பது தேர்தலை எந்த விதத்திலும் அவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது. இது ஊழல் கிடையாது, வரி கட்டவில்லை என்று தான் கூறுகிறார்கள். வரியை கட்டிவிட்டால் பிரச்சினை முடிவுக்கு வந்துவிடும். அவருக்கு மேல்முறையீடு செய்வதற்கும் வாய்ப்புண்டு.

இவ்வாறு அவர் கூறினார்.




## மத்திய கைலாஷ் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள

# ‘எல்’ வடிவ பாலம்: 16-ந்தேதி திறந்து வைக்கிறார் முதல்வர் ஸ்டாலின்!

சென்னை, பிப். 07–

சென்னையின் மைய பகுதியான, மத்திய கைலாஷ் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய ‘எல்’ வடிவ பாலம் கட்டுமான பணிகள் முடிவடைந்துள்ள நிலையில், வரும் 16ந்தேதி பொதுமக்கள் பயன்பாட்டுக்க முதல்வர் ஸ்டாலின் திறந்து வைக்கிறார்.

இந்த 60 கோடி ரூபாய் மேம்பாலத் திட்டத்திற்கு பல மாதங்களாக தாமதம் ஏற்பட்டது. ஆனால், இப்போது மாநில நெடுஞ்சாலைத் துறை இரண்டு முக்கிய தடைகளை நீக்கியுள்ளது. முதலாவது, சர்தார் படேல் சாலை–OMR சந்திப்பில் மையப் பாலத்தை அமைப்பது. இரண்டாவது, சர்தார் படேல் சாலையில் அணுகு சாலையை உருவாக்குவது. இந்த இரண்டு வேலைகளும் முடிந்ததால், மேம்பாலம் திறப்பதற்கான பணிகள் வேகமாக நடந்து வருகின்றன.

# ஆன்லைன் மூலம் காலாவதியான பொருள் விற்றால் நடவடிக்கை!




சென்னை , பிப். 07–

ஆன்லைன் மூலம் காலாவதியான பொருட்கள் விற்றால் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று உணவு பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது. ஆன்லைன் வழியாக மளிகை பொருள் வாங்கும்போது காலாவதி தேதி ஆராய்ந்து மக்கள் வாங்க வேண்டும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# இடைக்கால பட்ஜெட் பிப். 17-ந்தேதி தாக்கல் - சபாநாயகர் அறிவிப்பு!



சென்னை, பிப். 07–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டத்தில் இடைக்கால நிதிநிலை அறிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. சட்டசபை தேர்தல் நெருங்கும் சூழலில், விரைவில் இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்பட உள்ளது.

இந்நிலையில் தமிழ்நாடு சட்டசபை பட்ஜெட் கூட்டத்தொடர் தொடர்பாக சபாநாயகர் அப்பாவு செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

சட்டசபை வரும் 17–ந்தேதி கூடுகிறது. தமிழ்நாடு அரசின் இடைக்கால பட்ஜெட்டை அன்றைய தினம் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்கிறார்.

பட்ஜெட் கூட்டத்தொடரை எவ்வளவு நாள் நடத்துவது என அலுவல் ஆய்வு குழு கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# விக்கிரவாண்டி தொகுதியில் விஜய் போட்டியிட திட்டம்?

சென்னை, பிப். 07–

தமிழ்நாட்டில் முதல் முறையாக சட்டமன்ற தேர்தலை நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக்கழகம் சந்திக்கிறது. 234 தொகுதிகளிலும் களம் இறங்கும் அந்த கட்சியின் முதல்வர் வேட்பாளராக நடிகர் விஜய் முன்னிறுத்தப்பட்டு உள்ளார்.



ஆட்சியை பிடித்தே தீருவோம் என்ற நம்பிக்கையோடு தேர்தலை சந்திக்கும் த.வெ.க.வில் ஒவ்வொரு தொகுதியிலும் போட்டியிட தகுதியான வேட்பாளர் தேர்வு விரைவில் நடைபெற உள்ளது.

விஜய் போட்டியிட போகும் தொகுதி பற்றியும் ஆலோசித்து வருகிறார்கள். விஜய் கட்சி தொடங்கும் போதே வெற்றியை குறிக்கும் வகையில் முதல் எழுத்தான ‘வி’யில் தொடங்கும் ஊர்களை தேர்வு செய்து மாநாட்டை நடத்த முடிவு செய்தார்.

அதன்படி விக்கிரவாண்டி, வேளச்சேரி, விருகம்பாக்கம் ஆகிய 3 தொகுதிகள் பரிசீலனையில் இருப்பதாக கூறப்படுகிறது. இதில் விக்கிரவாண்டி தொகுதியை தேர்வு செய்து இருப்பதாக கூறப்படுகிறது. இந்த தொகுதியில் உள்ள வி. சாலையில் தான் விஜய் கட்சியின் முதல் அரசியல் மாநாடு நடத்தப்பட்டது.

மாநாடு நடந்த இடத்தில் விஜய் கொடியேற்றிய 100 அடி உயர கொடிக்கம்பம் அதில் அமைக்கப்பட்டுள்ள கல்வெட்டும் கம்பீரமாக காட்சி அளிக்கிறது. வயல் வெளியில் வானளாவிய உயரத்தில் த.வெ.க. கொடி பறக்கும் இந்த கம்பம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. இன்றும் சென்னை–திருச்சி தேசிய நெடுஞ்சாலை வழியாக பயணிக்கும் பலர் வி.சாலை வழியாக அங்கு சென்று கொடிக்கம்பத்தை பார்வையிட்டும் விஜய் படத்துடன் இடம் பெற்றுள்ள கல்வெட்டு அருகே நின்று புகைப்படம் எடுத்தும் செல்கிறார்கள்.

த.வெ.க. வரலாற்றில் முதல் முத்திரை பதித்த இந்த தொகுதியையே விஜய் முதல் தேர்வாக வைத்து இருப்பதாகவும் கூறப்படுகி றது. இந்த தொகுதியில் போட்டியிட்டால் தனது தொகுதியில் பிரசாரம் செய்வதோடு மாநிலத்தின் இதர பகுதிகளுக்கும் எளிதாக பிரசாரம் செய்ய சென்று வரலாம் என்று கருதுவதாக கூறப்படுகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் அமைந்துள்ள இந்த தொகுதி கிராமங்கள் நிறைந்த பகுதி. 103 ஊராட்சிகள் மற்றும் விக்கிரவாண்டி, காணை, கோலியனூர், கண்டமங்கலம் ஆகிய ஊராட்சிகள் அடங்கி உள்ளன. 2011 தொகுதி மறுசீரமைப்பை தொடர்ந்து தற்போதைய விக்கிரவாண்டி தொகுதி செயல்பட்டு வருகிறது.

தலையங்கம்

மதுரை மணி

சனிக்கிழமை 07.02.2026

விசுவாவசு தமிழ் வருடம்

தை மாதம் 24-ம் தேதி

## சத்தமில்லாமல் வேலையை பார்த்த ஆர்பிஐ



இந்திய பத்திர சந்தைக்கு வெளிநாட்டு முதலீட்டை கூடுதலாக ஈர்க்கும் முக்கிய நடவடிக்கையை இன்று நடந்த நாணய கொள்கை கூட்டத்தில் அறிவித்துள்ளது. ஆர்பிஐ கவர்னர் சஞ்சய் மல்ஹோத்ரா கூறுகையில், Voluntary Retention Route (VRR) என்ற சிறப்பு முதலீட்டு பாதையில் உள்ள ரூ.2.5 லட்சம் கோடி மொத்த வரம்பு நீக்கப்படுகிறது. இது நீண்டகால முதலீட்டாளர்களுக்கு கூடுதல் இடவசதியை உருவாக்கும் என தெரிவித்தார்.

**(VRR) என்றால் என்ன?**

VRR என்பது நீண்டகால வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்க்க உருவாக்கப்பட்ட சிறப்பு திட்டம். இதில் முதலீடு செய்யப்படும் தொகையில் குறைந்தபட்சம் 75% தொகையை மூன்று ஆண்டுகள் இந்தியாவில் வைத்திருக்க வேண்டும். இதற்கு பதிலாக ஆர்பிஐ மற்றும் இந்திய அரசு சில ஒழுங்குமுறை தளர்வுகள் மற்றும் நெகிழ்வுத்தன்மை வழங்கப்படுகிறது. இது குறுகிய கால வர்த்தகர்களை விட நிலையான முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**என்ன மாற்றம் நடக்கிறது?**

முன்பு VRR மூலம் மொத்தமாக ரூ.2.5 லட்சம் கோடி மட்டுமே முதலீடு செய்ய முடியும். இப்போது இந்த மொத்த வரம்பு முழுவதும் நீக்கப்படுகிறது. இதனால் முதலீட்டாளர்கள் நிலையான லாபத்தை தரும் பத்திர சந்தையில் அதிகப்படியான முதலீட்டை குவிப்பார்கள். பங்குச்சந்தை அதிகளவிலான தடுமாற்றத்தை எதிர்கொண்டு வரும் காரணத்தால் கடந்த சில மாதங்களாக பத்திர சந்தை மீதான முதலீடுகள் அதிகரித்து வருகிறது. இதேபோல் பங்குச்சந்தை தடுமாற்றத்தால் பங்குச்சந்தையில் இருக்கும் வெளிநாட்டு முதலீடுகளும் குறைந்து வருகிறது. இதனால் டாலருக்கு எதிரான ரூபாய் மதிப்பும் குறைந்து வருகிறது. இதை கட்டுப்படுத்த வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு பத்திர சந்தையில் கதவுகள் திறக்கப்பட்டு உள்ளது. VRR முதலீடுகள் என்பது இயல்பான "ஜெனரல் ரூட்" வரம்புகளுக்கு கூடுதலாக வரும் முதலீட்டு தொகை.

VRR திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படும் முதலீட்டு கருவிகள் VRR–Govt (அரசு பத்திரங்கள்):

இந்திய அரசு பத்திரங்கள் (Government Securities) – Dated Securities, கருவூல பத்திரங்கள் (T–bills), மற்றும் மாநில வளர்ச்சி கடன்கள் (State Development Loans – SDLs) ஆகியவை VRR திட்டத்தின் கீழ் முதலீடு செய்ய அனுமதிக்கப்படுகின்றன. இவை அரசு பாதுகாப்புடன் கூடிய நீண்டகால மற்றும் குறுகியகால பத்திரங்கள் ஆகும்.

VRR–Corp (கார்ப்பரேட் கடன் கருவிகள்):

கார்ப்பரேட் கடன் கருவிகள் – FEMA விதிமுறைகளின் Schedule 5–இல் பட்டியலிடப்பட்டவை. இதில் Non–Convertible Debentures (NCDs) மற்றும் Commercial Papers (CPs) ஆகியவை அடங்கும். இவை தனியார் நிறுவனங்கள் வெளியிடும் கடன் கருவிகளாகும். இந்த இரு வகை கருவிக ளும் Voluntary Retention Route (VRR) திட்டத்தின் கீழ் வெளிநாட்டு முதலீட்டாளர்களால் முதலீடு செய்ய அனும திக்கப்படுகின்றன. இது நீண்டகால மற்றும் நிலையான முதலீட்டை ஊக்குவிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**இது ஏன் முக்கியம்?**

இந்த மாற்றம் மூலம் இந்திய சந்தையில் நிதி ஸ்திரத்தன்மை மேம்படுத்தப்படுவது மட்டும் அல்லாமல் நீண்டகால உலகளாவிய மூலதனத்தை ஈர்க்கிறது. அரசு மற்றும் நிறுவனங்கள் பத்திர சந்தையில் கூடுதல் முதலீட்டை பெற உதவுகிறது. தற்போது முதலீட்டு வரம்பு நீக்கப்படுவது மூலம் பத்திர சந்தை இந்தியாவில் வலுப்பெறுகிறது. குறுகிய கால ஏற்ற இறக்கமான பணத்தை சார்ந்திருப்பது குறைகிறது. இது இந்திய பொருளாதாரத்தை மேலும் உறுதியாக்கும் நடவடிக்கையாகும். வெளிநாட்டு முதலீடு அதிகரித்தால் பத்திர சந்தை வலுவடையும். அரசு மற்றும் நிறுவனங்கள் கடன் எடுக்கும் செலவு குறையும். இது பொருளாதார வளர்ச்சிக்கு உதவும். நீண்டகாலத்தில் வங்கி கடன் மற்றும் வட்டி விகிதங்களில் நிலைத்தன்மை அதிகரிக்கும். இந்த முடிவு இந்தியாவின் நிதி சந்தையை உலகளவில் மேலும் ஈர்க்கும்.

# ஆட்சியில் பங்கு கேட்டு காங்கிரஸ் அடம்: 'ஒரே கல்லில் 2 மாங்காய்' அடிக்க தி.மு.க. போடும் திட்டம்!

சென்னை, பிப். 07–

தமிழகத்தில் நடைபெற்று வரும் தி.மு.க. அரசின் பதவிக்காலம் வரும் மே மாதம் 10–ந் தேதியுடன் நிறைவடைகிறது. எனவே, அதற்கு முன்னதாக சட்டசபை தேர்தல் நடத்தியாக வேண்டும். தமிழகத்தைப் போல் புதுச்சேரி, கேரளா, அசாம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களிலும் ஆட்சியாளர்களின் பதவிக்காலம் முடிவடைவதால், 5 மாநிலங்களுக்கும் சேர்த்து ஒன்றாக சட்டசபை தேர்தலை நடத்த தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது. அந்த வகையில், வரும் ஏப்ரல் மாதம் பல்வேறு கட்டங்களாக 5 மாநிலங்களிலும் சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. தமிழகத்தை பொறுத்தவரை 2–வது கட்ட தேர்தலின்போது வாக்குப்பதிவு நடைபெறும் என்று தெரிகிறது.

**அதிருப்தியில் தி.மு.க.**

இந்த நிலையில், சட்டசபை தேர்தல் தேதியை இம்மாதம் இறுதியில் அல்லது அடுத்த மாதம் (மார்ச்) தொடக்கத்தில் தேர்தல் ஆணையம் அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுவிட்டால், உடனடியாக தேர்தல் நடத்தை விதிமுறைகளும் அமலுக்கு வந்துவிடும் என்பதால், அதற்கு முன்னதாக தமிழ்நாட்டில் இடைக்கால பட்ஜெட்டும் தாக்கல் செய்யப்பட வேண்டும். இதுபோன்று தொடர் பணிகள் இருப்பதால், ஆளுங்கட்சியான தி.மு.க., தேர்தல் பணிகளை எப்போதோ தொடங்கியிருக்க வேண்டும். ஆனால், கூட்டணியில் உள்ள காங்கிரஸ் கட்சி, ஆட்சியில் பங்கு, 41 தொகுதிகள், 2 ராஜ்ய சபா சீட் என்று அடுக்கடுக்கான கோரிக்கைகளை வலியுறுத்தி வருவதால், அதிருப்தி அடைந்த தி.மு.க. இன்னும் தொகுதி பங்கீட்டு பேச்சு வார்த்தைக்கு குழுவையே அமைக்காமல் காலம் தாழ்த்தி வருகிறது.

அதிர்ந்துபோன காங்கிரஸ்

இதனால், டெல்லியில் இருந்து வர திட்டமிட்டு இருந்த அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபாலின் வருகையும் தள்ளிப்போய் கொண்டே இருக்கிறது. திடீரென, ஆட்சியில் பங்கு, கூடுதல் தொகுதிகள் என காங்கிரஸ் கட்சி கேட்பதற்கு, கட்சியின் வளர்ச்சி ஒன்றே காரணமாக சொல்லப்படுகிறது.

கடந்த 2024–ம் ஆண்டு நடந்த நாடாளுமன்ற தேர்தலில், தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி வாங்கிய வாக்கு சதவீதத்தை விட (10.69) மற்றொரு தேசிய கட்சியான பா.ஜ.க.வின் வாக்கு சதவீதம் (11.24) அதிகரித்தை பார்த்து, காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய தலைமை அதிர்ந்துபோய்விட்டதாம்.

**தி.மு.க. மறுப்பு**

தமிழகத்தில் நம்மை வைத்துத்தான் தி.மு.க. ஆட்சிக்கு வருகிறது என்று நினைக்கும் காங்கிரஸ் கட்சி, நமது வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு தரவில்லையே என்று வருத்தப்படுகிறதாம். அதனால்தான் இந்த முறை ஆட்சியில் பங்கு என்ற கோஷத்தை முதலிலேயே ஓங்கி ஒலித்து வருகிறதாம். ஆனால், 'மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி' என்ற கொள்கையுடன் பயணித்து வரும் தி.மு.க., காங்கிரஸ் கட்சியின் கோரிக்கையை ஏற்க முடியாது என்று முதலிலேயே மறுத்துவிட்டதாம். இதனால், தொகுதிகளின் எண்ணிக்கையையாவது அதிகம் பெற்றுவிட வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி கங்கணம் கட்டி நிற்கிறதாம். குறைந்தது 35 தொகுதிகளையாவது பெற்றுவிட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறதாம்.



**இரட்டை தலைவலி**

ஆனால், தி.மு.க.வோ, மத்தியில் காங்கிரஸ் கட்சி எதிர்க்கட்சி அந்தஸ்தில் இருப்பதற்கு நாம் தான் காரணம் என கூறுகிறதாம். இதனால், தொகுதிகளின் எண்ணிக்கையையும் உயர்த்தி தர முடியாது என்று கறார் காட்டுகிறதாம்.

காங்கிரஸ் கட்சியால் தி.மு.க. தலைமைக்கு தலைவலி இப்படி என்றால், கூட்டணியில் உள்ள மற்ற கட்சிகள், இரட்டை இலக்க தொகுதிகள் வேண்டும் என்று ஒருமித்த குரலில் கோஷம் எழுப்புவதால், அது மற்றொரு பக்க தலைவலியாக இருக்கிறதாம். இப்படி, இரட்டை தலைவலியில் சிக்கித் தவிக்கும் தி.மு.க., தே.மு.தி.க., பா.ம.க. வையும் (டாக்டர் ராமதாஸ் அணி) கூட்டணி வளையத்துக்குள் கொண்டு வர முயற்சி மேற்கொண்டு வருகிறது.

**அமைச்சர்கள் கருத்து**

இதுபோன்ற சூழ்நிலையில், ஒரே கல்லில் இரண்டு மாங்காயை அடித்துவிட தி.மு.க. திட்டம் வகுத்து வருகிறதாம். சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவை கூட்டம் முடிவடைந்ததும், மூத்த அமைச்சர்கள் சிலர் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலினை தனியாக சந்தித்து பேசினார்களாம்.

அப்போது, "காங்கிரஸ் கட்சி நம் கூட்டணியில் இருப்பதால்தான், மத்தியில் ஆளும் பா.ஜ.க., அமலாக்கத்து றை, வருமான வரித்துறை மூலம் நமக்கு குடைச்சல் கொடுக்கிறது. காங்கிரஸ் கட்சியை கைவிட்டுவிட்டால், நம் மீதான அழுத்தம் குறையும்" என்று கூறினார்களாம். அதற்கு முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலினும், "நாமாக கூட்டணியில் இருந்து காங்கிரஸ் கட்சியை வெளியே அனுப்ப வேண்டாம். அவர்களாகவே சென்றால் விட்டுவிடலாம்" என்று கூறினாராம்.

**ஒரே கல்லில் 2 மாங்காய்**

தி.மு.க. கூட்டணியில் இருந்து காங்கிரஸ் கட்சி வெளியேறினால், அவர்களுக்கு கடந்த முறை கொடுத்த 25 தொகுதிகள் மிச்சப்படும். அதை கூட்டணியில் புதிதாக சேரும் கட்சிகளுக்கும், கூடுதல் தொகுதிகள் கேட்டு அடம்பிடிக்கும் கட்சிகளுக்கும் பிரித்துக்கொடுத்தால், எல்லா பிரச்சினைகளும் முடிவுக்கு வந்துவிடும் என்று தி.மு.க. தலைமை நினைக்கிறதாம். இதன் மூலம் ஒரே கல்லில் இரண்டு மாங்காயை அடித்துவிட முடியும் என்றும் தி.மு.க. தலைமை நம்புகிறதாம். இனி, அடுத்த கட்ட தேர்தல் நேர அரசியல் நகர்வு எப்படி இருக்கிறது என்பதை பொருத்திருந்து பார்ப்போம்.

# ஓமனில் ஈரான்- அமெரிக்கா இடையே மறைமுக பேச்சுவார்த்தை!

அமெரிக்கா, பிப். 07–

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையில் போர் பதற்றம் நிலவி வரும் நிலையில், ஓமனில் இருநாடுகளும் மறைமுக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டன.

ஈரானின் அணுசக்தி திட்டம் குறித்த பேச்சுவார்த்தைகளை எவ்வாறு அணுகுவது என்பது தொடர்பான விசயத்தில், மீண்டும் ஆரம்ப புள்ளிக்கு இரு நாடுகளும் திரும்பியதாக தெரிகிறது. அமெரிக்கா சார்பில் மத்திய கிழக்கு ராணுவ கமாண்டர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார்.

இருநாட்டின் பிரதிநிதிகள் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தவில்லை. ஓமன் மத்தியஸ்தரராக செயல்பட்டு, ஓமனிடம் இரு நாடுகளும் தங்கள் கருத்தை தெரிவித்து அதை பரிமாற்றிக் கொண்டன. இந்த பேச்சுவார்த்தை மூலம் பதற்றம் முடிவுக்கு வரும் என ஈரான் நம்புகிறது.

அதேவேளையில், ஈரானின் அணுஆயுத திட்டம் குறித்து ஒப்பந்தம் முடிவுக்கு வராமல் பேச்சுவார்த்தை முடிவு பெறாது என அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார். மேலும், அணு ஆயுத திட்டம் ஒப்பந்தம் எட்டப்படவில்லை என்னால் ஈரான் விளைவுகளை சந்திக்க நேரிடும் எனவும் எச்சரித்திருந்தார்.

ஓமனில் மறைமுக பேச்சுவார்த்தை தொடங்கிய நிலையில், ஈரானுடன் அமெரிக்கா சிறந்த பேச்சுவார்த்தைகளை நடத்தியது எனத் தெரிவித்துள்ளார். அத்துடன் அடுத்த வாரம் தொடக்கத்தில் மேற்கொண்டு பேச்சுவார்த்தைக்கு திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# தேர்வர்களே.. டிஎன்பிஎஸ்சி வெளியிட்ட முக்கிய அறிவிப்பு..!

சென்னை, பிப். 07–

தமிழக அரசு துறைகளில் பெரும்பாலான பணியிடங்களை தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் எனும் டிஎன்பிஎஸ்சி நிரப்பி வருகிறது. குரூப் 1, குரூப் 2, குரூப் 4 என ஆண்டுதோறும் பல்வேறு தேர்வுகளை டிஎன்பிஎஸ்சி நடத்தி வருகிறது. இதில் எடுக்கும் மதிப்பெண்கள் அடிப்படையில், காலிப் பணியிடங்களுக்கு ஆட்களை நிரப்பி வருகிறது. இந்த நிலையில், தற்போது முக்கிய அறிவிப்பை டிஎன்பிஎஸ்சி வெளியிட்டுள்ளது. அதாவது, குரூப் 1சி தேர்வர்களுக்கு சரியான சான்றிதழ்களை மறுபதிவேற்றம் செய்ய வாய்ப்பு வழங்கப்படுவதாக டிஎன்பிஎஸ்சி அறிவித்துள்ளது.




**குரூப் 1சி தேர்வு**

குரூப் 1சி தேர்வைத தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் நடத்தி வருகிறது. இந்த தேர்வு கல்வித்துறையில் உயர் பதவிகளை நிரப்ப நடத்தப்படுகிறது. முக்கியமாக மாவட்ட கல்வி அலுவலர் பணிக்கு குரூப் 1சி தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு நேர்காணல் நடத்தப்பட்டு தேர்வு செய்யப்படுவார்கள். முதன்மைத் தேர்வு, நேர்காணல் மூலம் குரூப் 1சி தேர்வுக்கு ஆட்கள் நிரப்பப்படுகின்றனர்.

இந்த தேர்வுக்கு பட்டப்படிப்பு மற்றும் பி.எட் முடித்திருப்பவர்கள் தகுதியானவர்கள். இந்த நிலையில், குரூப் சி தேர்வர்களுக்கு முக்கிய அறிவிப்பை டிஎன்பிஎஸ்சி வெளியிட்டுள்ளது. அதன்படி, குரூப் 1சி பதவிக்கான பணியிடங்களுக்கு நடத்தப்பட்ட தேர்வில் சான்றிதழ் பதிவேற்றம் சரியாக முடிக்காதவர்களுக்கு கடைசி வாய்ப்பு டிஎன்பிஎஸ்சி வழங்கியுள்ளது.

இதுகுறித்து டிஎன்பிஎஸ்சி வெளியிட்ட அறிவிப்பில், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் அறிவிக்கை எண்: 05/2024, நாள்: 23.04.2024 இன் வாயிலாக மாவட்ட கல்வி அலுவலர் – (குரூப் I–C பணி) பதவிக்கான காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம் செய்வதற்கு தேர்வர்களால் சான்றிதழ் பதிவேற்றம் செய்யப்பட்டதில், சான்றிதழ் சரிபார்ப்பிற்கு பின்னர் சில தேர்வர்கள் உரிய சான்றிதழ்களை சில குறைபாடுகளுடன் / சரியாக பதிவேற்றம் செய்யப்படாமல் உள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

**தேர்வர்களுக்கு பிப்ரவரி 12 கடைசி நாள்:**

எனவே, இத்தகைய தேர்வர்களுக்கு இறு:திவாய்ப்பு வழங்கும் விதமாக பிப்ரவரி 6ஆம் தேதி முதல் பிப்ரவரி 12ஆம் தேதி இரவு 11.59 மணி வரை விடுபட்ட மற்றும் சரியான சான்றிதழ்களை மறுபதி வேற்றம் செய்ய வாய்ப்பு வழங்கப்படுகிறது. இத்தகவல் அத்தேர்வர்களுக்கு மட்டும் குறுஞ்செய்தி, மின்னஞ்சல் மற்றும் குறிப்பாணை மூலமாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, அத்தேர்வர்கள் அனைவரும் குறிப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள சான்றிதழ்களை தேர்வாணைய இணையதளத்தில் ஒருமுறைப் பதிவு தளம் வாயிலாக பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள். அவ்வாறு உரிய சான்றிதழ்களை பதிவேற்றம் செய்யாத தேர்வர்களின் உரிமைகோரல் (claim)/ விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என டிஎன்பிஎஸ்சி தெரிவித்துள்ளது. எனவே, குரூப் 1சி தேர்வர்கள் tnpsc.gov.in என்ற இணையதளம் வாயிலாக சான்றிதழ்களை பிப்ரவரி 12ஆம் தேதிக்குள் பதிவேற்றம் செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக, குரூப் 4 தேர்வர்களுக்கு சமீபத்தில் முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதாவது, குரூப் 4 தேர்வுக்கான இரண்டாம் கட்ட கலந்தாய்வு சென்னையில் பிப்ரவரி 24,25ஆம் தேதிகளில் நடைபெறும் என டிஎன்பிஎஸ்சி தெரிவித்துள்ளது. இதற்கு பிறகு, தேர்வர்களுக்கு மறுவாய்ப்பு கிடையாது என்றும் தெரிவித்துள்ளது.

# தி.மு.க. - த.வெ.க.வில் இணைவாரா? - ஓ.பன்னீர்செல்வம் விளக்கம்!




மீனம்பாக்கம், பிப். 07–

தமிழகத்தில் விரைவில் சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. இதையொட்டி அரசியல் கட்சிகள் கூட்டணி அமைப்பது, தேர்தல் அறிக்கை தயாரிப்பது, தங்கள் கட்சி சார்பில் போட்டியிட விரும்புபவர்களிடம் விருப்ப மனுக்களை பெறுவது என தேர்தல் பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றன.

இந்நிலையில் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து மதுரைக்கு செல்ல வந்த முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் நிருபர்களிடம் கூறும்போது, "தை மாதம் முடிய இன்னும் 9 நாட்கள் இருக்கிறது.

தேர்தலுக்கு இன்னும் 3 மாதம் இருக்கிறது" என்றார். அப்போது நிருபர்கள், "ஓ.பி.எஸ். தனிக்கட்சி தொடங்குவாரா?. தி.மு.க. அல்லது த.வெ.க.வில் இணைவாரா?" என கேட்டதற்கு அவர், "எந்த ஓ.பி.எஸ்.?" என கேட்டுவிட்டு அங்கிருந்து சென்றார்.



# மணி பிளான்ட்டில் இந்த ஒரு பொருளை வைத்தால்.. பண இழப்பே ஏற்படாது..! அதிர்ஷ்டம் உங்களைத் தேடி வரும்..!



இந்தச் செடியை பால்கனி, ஹால் அல்லது அலுவலகத்தின் மூலையில் வைத்தால், அது மனதிற்கு குளிர்ச்சியையும் வீட்டிற்கு அழகையும் தருகிறது. வாஸ்து சாஸ்திரத்தின்படி, மணி பிளான்ட் மிகவும் பசுமையாகவும் ஆரோக்கியமாகவும் இருந்தால், அந்த வீட்டில் அதிர்ஷ்டமும் வலுவாக இருக்கும். செடி வாடி, இலைகள் மஞ்சள் நிறமாக மாறினால், அந்த வீட்டில் எதிர்மறை ஆற்றல் இருப்பதாகக் கருதப்படுகிறது.

அதனால்தான் மணி பிளான்ட்டிற்குத் தவறாமல் தண்ணீர் ஊற்றி, சூரிய ஒளி படுமாறு வைக்க வேண்டும். அது நன்றாக வளர்ந்தால், வீட்டில் மகிழ்ச்சி, அமைதி மற்றும் பண வரவு அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது. இந்த சில பொருட்களை மணி பிளான்ட் செடியின் அருகில் வைத்தால் பணத் தட்டுப்பாடு ஏற்படும் என்று கூறப்படுகிறது. அது என்னவென்று பார்ப்போம்.

அவற்றில் ஒன்று பால் பயன்படுத்துவது. மாதத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை தண்ணீரில் சிறிது பால் கலந்து செடிக்கு ஊற்றினால், செடி வேகமாக வளரும் என்று கூறப்படுகிறது. பால் தூய்மை மற்றும் மங்களகரமான ஆற்றலின் சின்னமாகும். இப்படிச் செய்வதால் வீட்டில் நிதிப் பிரச்சனைகள் குறைந்து அதிர்ஷ்டம் பெருகும் என்று நம்பப்படுகிறது.

மற்றொரு குறிப்பு சர்க்கரை. மணி பிளான்ட் செடியின் தொட்டியில் மிகச் சிறிய அளவு சர்க்கரையைச் சேர்த்து தண்ணீர் ஊற்றினால், செடி செழிப்பாக வளரும் என்று வாஸ்து சாஸ்திரம் நம்புகிறது. சர்க்கரை வீட்டில் இனிமை, அமைதி மற்றும் மங்களகரமான தன்மையைக் குறிக்கிறது. இது குடும்பத்தில் சண்டைகளைக் குறைத்து நிதி நிலைத்தன்மையைக் கொண்டுவரும் என்று கூறப்படுகிறது.

மணி பிளான்ட் செடியின் தொட்டியைச் சுற்றிலும் அல்லது செடியைச் சுற்றிலும் சிவப்பு நூலைக் கட்டுவதும் மங்களகரமானதாகக் கருதப்படுகிறது. சிவப்பு நிறம் சக்தி மற்றும் மங்களகரமான தன்மையின் சின்னமாக கருதப்படுகிறது. இப்படிச் செய்வதால் வீட்டில் நிலையான வருமானம் உறுதி செய்யப்படும் என்று நம்பப்படுகிறது. மேலும், செடியைச் சுற்றி சிறிய வெள்ளை கற்கள் அல்லது படிகங்களை வைப்பது நேர்மறை ஆற்றலை அதிகரிக்கும் என்றும் கூறப்படுகிறது.

இவை வீட்டின் சூழ்நிலையை அமைதியானதாக மாற்ற உதவுகின்றன. மணி பிளான்ட் செடியை வைக்கும் திசையும் மிகவும் முக்கியமானது. வாஸ்து சாஸ்திரத்தின்படி, இந்தச் செடியை வடக்கு அல்லது கிழக்கு திசையில் வைத்தால் அதிக லாபம் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது.

இந்தத் திசைகள் செல்வம், வளர்ச்சி மற்றும் நல்ல வாய்ப்புகளுக்கு உகந்தவை. எனவே, சரியான இடத்தில் சரியான முறையில் மணி பிளான்ட் செடியை வளர்த்தால், அது உங்கள் வீட்டிற்கு நல்ல அதிர்ஷ்டம், அமைதி மற்றும் நிதி வலிமையைக் கொண்டுவரும் என்று நம்பப்படுகிறது.




டிஸ்னி அட்வென்ச்சரில்

# 'தி லயன் கிங்' வானவேடிக்கை: கதை சொல்லியா ஷாருக் கான்


டிஸ்னி க்ரூஸ் லைன், தனது டிஸ்னி அட்வென்ச்சர் கப்பலில் அறிமுகமாகும் புதிய வானவேடிக்கை நிகழ்ச்சி "தி லயன் கிங்: செலிப்ரேஷன் இன் தி ஸ்கை" குறித்து அறிவித்துள்ளது. இந்த சிறப்பு நிகழ்ச்சியில் உலகப் புகழ்பெற்ற நடிகர் ஷாரூக் கான் கதை சொல்லியாக (Narrator) இடம்பெறுகிறார். தி லயன் கிங் படத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த வானவேடிக்கை விருந்து, அதிரடி பைரோடெக்னிக்ஸ், நாடகமயமான விளக்குகள் மற்றும் "Circle of Life," "Hakuna Matata," போன்ற பிரபல பாடல்களுடன் இரவுக் ஆகாயத்தை மிளிரச் செய்யும்.

முன்னதாக தி லயன் கிங் (2019) மற்றும் முஃபாசா (2024) ஹிந்தி பதிப்புகளில் குரல் வழங்கிய ஷாரூக் கான், இந்த நிகழ்ச்சியை "முழு வட்ட அனுபவம்" எனக் குறிப்பிட்டுள்ளார். குடும்பம் மற்றும் சமூகத்தின் அருமையை எடுத்துரைக்கும் இந்த நிகழ்ச்சி, அனைத்து வயதினரையும் உணர்ச்சியுடன் இணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இசை அமைப்பு ராயல் ஸ்காடிஷ் நேஷனல் ஆர்கஸ்ட்ரா மற்றும் தென்னாப்பிரிக்காவின் Ndlovu Youth Choir இணைந்து வழங்கிய சிறப்பு ஒத்திசைவுடன் அமைந்துள்ளது.

"முழுமையான புதிய 'தி லயன் கிங்: செலிப்ரேஷன் இன் தி ஸ்கை' நிகழ்ச்சியில் ஷாரூக் கானை கதை சொல்லியாக வரவேற்பது, டிஸ்னி அட்வென்ச்சரில் விருந்தினர்களுக்கான அனுபவத்தை மேலும் சிறப்பாக்குகிறது," என்று சரா ஃபாக்ஸ், துணைத் தலைவர் மற்றும் பிராந்திய பொது மேலாளர், தென்கிழக்கு ஆசியா, டிஸ்னி க்ரூஸ் லைன் தெரிவித்துள்ளார். இந்த நிகழ்ச்சி, மூன்று மற்றும் நான்கு இரவு பயணங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாலைகளில் நடைபெறும்.




## ஆயுள் முழுக்க செவிடாகப் போறீங்களா..?



இன்றைய டிஜிட்டல் யுகத்தில் நமது அன்றாட வாழ்வின் பிரிக்க முடியாத அங்கமாக மாறிவிட்ட ஹெட்போன்கள் மற்றும் இயர்போன்கள், சத்தமில்லாமல் நமது செவித்திறனைப் பறிக்கும் எமனாக உருவெடுத்துள்ளன. உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான இளைஞர்கள், தாங்கள் ஒரு மிகப்பெரிய சுகாதார நெருக்கடியில் சிக்கிக்கொண்டிருப்பதை உணராமலேயே மணிக்கணக்கில் இந்தச் சாதனங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். ஆரம்பத்தில் சாதாரண காதுவலியாக தொடங்கும் இந்த பாதிப்பு, காலப்போக்கில் நிரந்தர செவிடாக மாறும் அபாயம் இருப்பதாக மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

**ஹெட்போன்களால் ஏற்படும் மறைமுக பாதிப்புகள் :**

ஸ்மார்ட்போன் மற்றும் லேப்டாப் கலாச்சாரம் பெருகிவிட்ட நிலையில், அலுவலகப் பணிகள் முதல் பொழுதுபோக்கு வரை அனைத்திற்கும் ஹெட்போன்களையே மக்கள் நாடுகின்றனர். குறிப்பாக, அதிக சத்தத்துடன் பாடல்களை கேட்பதும், தரமற்ற இயர்போன்களை பயன்படுத்துவதும் செவிப்பறையை மெல்ல மெல்ல சிதைக்கின்றன. காதில் ஒருவித கனமான உணர்வு அல்லது லேசான வலி ஏற்பட்டால், அது உங்கள் காதுகள் அபாயக் கட்டத்தில் இருப்பதை உணர்த்தும் முதல் எச்சரிக்கை மணி என்பதை மறந்துவிடக் கூடாது.

**மனநலத்தையும் பாதிக்கும் :**

தொடர்ச்சியான ஹெட்போன் பயன்பாடு என்பது வெறும் காது கேளாமைப் பிரச்சினையோடு நின்றுவிடுவதில்லை. காதுக்குள் எப்போதும் ஏதோ ஒரு சத்தம் கேட்டுக்கொண்டே இருக்கும் 'டினிடஸ்' (Tinnitus) போன்ற பாதிப்புகள் மன அமைதியைச் சீர்குலைக்கும். இது மூளையில் அழுத்தத்தை ஏற்படுத்தி, தூக்கமின்மை, கவனச்சிதறல் மற்றும் அதீத மனப்பதற்றத்திற்கு வழிவகுக்கிறது. காதுக்குள் ஏற்படும் தொற்று மற்றும் கடுமையான வலி ஆகியவை ஒருவரின் ஒட்டுமொத்த வாழ்வியலையும் முடக்கிவிடும் வல்லமை கொண்டவை.

**நிபுணர்களின் ஆலோசனைகள் :**

இந்த ஆபத்திலிருந்து தப்பிக்க மருத்துவர்கள் சில எளிய வழிமுறைகளைப் பரிந்துரைக்கின்றனர். எப்போதுமே 60 சதவீதத்திற்கும் குறைவான ஒலியில் மட்டுமே கேட்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். தொடர்ச்சியாகப் பயன்படுத்தாமல், ஒவ்வொரு 30 நிமிடங்களுக்கு ஒருமுறை காதுகளுக்கு இடைவெளி கொடுப்பது அவசியம். தரமான 'நாய்ஸ் கேன்சலேஷன்' (Noise Cancellation) வசதி கொண்ட ஹெட்போன்களைப் பயன்படுத்துவது வெளிப்புறச் சத்தத்தைத் தவிர்க்க உதவும். எல்லாவற்றிற்கும் மேலாக, காதுகளைச் சுத்தம் செய்கிறேன் என்ற பெயரில் கூர்மையான பொருட்களைக் கொண்டு உட்புறச் சவ்வுகளைச் சேதப்படுத்தாமல் கவனமாக இருக்க வேண்டும்.

## இயக்குனர் எஸ்.பி.முத்துராமன், நடிகை எம்.என்.ராஜம்-க்கு கலைத்துறை வித்தகர் விருது! முதலமைச்சர் அறிவிப்பு...!




சென்னை, பிப். 07–

இயக்குனர் எஸ்.பி.முத்துராமன், நடிகை எம்.என்.ராஜம்–க்கு கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு உள்ளது. அதன்படி, 2024, 2025ம் ஆண்டிற்கான விருதுகள் அறிவிக்கப்பட்டு உள்ளது.

பழம்பெரும் நடிகை எம்.என்.ராஜம் மற்றும் மூத்த இயக்குனர் எஸ்.பி முத்துராமனுக்கு 2024, 2025ம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது வழங்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

## தமிழுக்காக நல்ல கருத்தை பேசியுள்ளேன்: கமல்ஹாசன் பேட்டி!



சென்னை, பிப். 07–

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவரும், நடிகருமான கமல்ஹாசன் நிருபர்களிடம் கூறியதாவது:–

நாடாளுமன்றத்தில் நான் பேசியது நல்ல கருத்து. அந்த கருத்து விவாதத்துக்குள்ளாக வேண்டும். தமிழுக்காக நல்ல கருத்து பேசியதாக எனக்கு தோன்றுகிறது. இதை மறுப்பவர்கள் விவாதிக்க வேண்டும். இதில் உண்மை என்னவென்று புரிந்து கொள்ளவேண்டும். ஜனநாயகத்தில் இப்படிதான் இருக்க வேண்டும். விவாதங்கள் தொடர வேண்டும். என்னுடைய கூட்டணி இந்தியாவுடன். இந்தியாதான் என்னுடைய நலன். உங்களுடைய நலனும்கூட. கூட்டணி என்பது 5 வருடங்களுக்கு ஒரு முறை பேசுவது. சித்தாந்தம்தான் முக்கியம். அதை நோக்கிதான் செல்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

## குரூப் 4 தேர்வர்களே அலர்ட்! டிஎன்பிஎஸ்சி முக்கிய அறிவிப்பு!

சென்னை, பிப். 07–

தமிழக அரசின் பெரும்பாலான பணியிடங்களை டிஎன்பிஎஸ்சி எனும் தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் நிரப்பி வருகிறது. இதற்காக குரூப் வாரியாக தேர்வுகளும் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. குரூப் 1, குரூப் 2,2ஏ, குரூப் 4 உள்ளிட்ட தேர்வுகளை டிஎன்பிஎஸ்சி நடத்தி வருகிறது. இதில் எடுக்கும் மதிப்பெண்கள் அடிப்படையில், காலிப் பணியிடங்களுக்கு ஆட்களை தேர்வு செய்து வருகிறது. அவ்வப்போது, டிஎன்பிஎஸ்சி முக்கிய அறிவிப்பு வெளியிட்டு வருகிறது. அந்த வகையில், குரூப் 4 கலந்தாய்வு குறித்து முக்கிய அறிவிப்பை டிஎன்பிஎஸ்சி வெளியிட்டுள்ளது.




இதுகுறித்து டிஎன்பிஎஸ்சி வெளியிட்ட அறிவிப்பில், இதுகுறித்து டிஎன்பிஎஸ்சி வெளியிட்ட அறிவிப்பில், ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு IV (தொகுதி IV) தேர்வில் தேர்வர்கள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் தரவரிசை விவரங்கள் 22.10.2025 அன்று தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டன. முதல் கட்ட மூலச்சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வின் முடிவில் உள்ள இளநிலை உதவியாளர் உள்ளிட்ட பிறபதவிகள் தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் பதவிகளுக்கான காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான இரண்டாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு வரும் 24.02.2026 மற்றும் 25.02.2026 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற உள்ளது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், எண்.3. தேர்வாணையச் சாலை (பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் கோட்டை ரயில் நிலையம் அருகில்), சென்னை–600 003–ல் உள்ள தேர்வாணைய அலுவலகத்தில் குரூப் 4 இரண்டாம் கட்ட கலந்தாய்வு நடைபெற உள்ளது. மேற்குறிப்பிட்ட இரண்டாம் கட்ட மூலச்சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு அழைக்கப்பட்ட தேர்வர்களின் பட்டியல் தேர்வாணைய இணைய தளத்தில் (tnpsc.gov.in) வெளியிடப்பட்டுள்ளது.

மறுவாய்ப்பு கிடையாது:

மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கான நாள் நேரம் மற்றும் இதர விவரங்கள் அடங்கிய அழைப்பாணையினை தேர்வர்கள் தேர்வாணைய இணையதளமான (tnpsc.gov.in) இருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மூலச்சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு அழைக்கப்படும் தேர்வர்களுக்கு அதற்கான விவரம் குறுஞ்செய்தி (SMS) மற்றும் மின்னஞ்சல் (E–mail) மூலம் மட்டுமே தெரிவிக்கப்படும். இரண்டாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தா ய்விற்கான அழைப்பாணை தனியே அஞ்சல் மூலம் அனுப்பப்படமாட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது. இரண்டாம் கட்ட சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் அனைவரும் கலந்தாய்விற்கு அனுமதிக்கப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள் என்பதற்கான உறுதி அளிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. தேர்வர்கள் மேற்படி சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு குறிப்பிடப்பட்ட நாள் மற்றும் நேரத்தில் கலந்துகொள்ளத் தவறினால் அவர்களுக்கு மறுவாய்ப்பு அளிக்கப்பட மாட்டாது எனவும் டிஎன்பிஎஸ்சி தெரிவித்துள்ளது.

## மூத்த குடிமக்களுக்கு நிவாரணம்: பட்ஜெட்டில் கிடைத்த பரிசு!

டெல்லி, பிப். 07–

மூத்த குடிமக்களுக்கு முக்கிய செய்தி உள்ளது. சமீபத்தில் தாக்கல் செய்யப்பட மத்திய பட்ஜெட்டில் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மூத்த குடிமக்களுக்கு நிவாரணம் அளிக்கும் செய்தி ஒன்றை அளித்துள்ளார்.




**பட்ஜெட் 2026 –இல் கிடைத்த நிவாரணம்:**

சமீபத்தில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 2026–27 நிதியாண்டுக்கான பட்ஜெட்டை தாக்கல் செய்தார். இந்த பட்ஜெட்டில் வரி வரம்புகளில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்றாலும், மூத்த குடிமக்களுக்கு ஒரு பெரிய நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. இதில், மூத்த குடிமக்களுக்கான வரி இணக்க நடைமுறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன.

இனி, டிமேட் கணக்கில் உள்ள பத்திரங்கள், கடன் பத்திரங்கள் மற்றும் பிற பத்திரங்கள் மூலம் ஈட்டப்படும் வட்டிக்கு டிடிஎஸ் (TDS) பிடித்தம் செய்வதைத் தவிர்க்க, படிவம் 15H–ஐ மீண்டும் மீண்டும் சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. வெவ்வேறு நிறுவனங்களில் பல பத்திரங்களைக் கொண்டுள்ள முதலீட்டாளர்களுக்கு நிவாரணம் அளிப்பதே இதன் நோக்கம் என்று அரசாங்கம் கூறியுள்ளது.

**மூத்த குடிமக்களுக்கு கிடைத்த சலுகை:**

ஒட்டுமொத்தமாக, அரசாங்கத்தின் இந்த முடிவால், மூத்த குடிமக்கள் படிவம் 15H–ஐ மீண்டும் மீண்டும் சமர்ப்பிக்க வேண்டிய அவசியத்திலிருந்து நிவாரணம் பெற்றுள்ளனர். இதுவரை, அவர்கள் இந்த படிவத்தை அனைத்து இடங்களிலும் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. இனி அந்த அவசியம் இருக்காது. பொதுவாக மூத்த குடிமக்கள் வருமானத்திற்காக படிவம் 15H–ஐப் பயன்படுத்து கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**படிவம் 15H–க்கான புதிய விதி:**

– 2026 பட்ஜெட்டில் படிவம் 15H தொடர்பான ஒரு விதியை அரசாங்கம் மாற்றியுள்ளது.

– இதுவரை, வெவ்வேறு நிறுவனங்கள் அல்லது பத்திரங்களில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்கள் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனித்தனியாக படிவம் 15H–ஐ சமர்ப்பிக்க வேண்டியிருந்தது.

– இருப்பினும், இனி முதலீட்டாளர்கள் படிவம் 15H–ஐ பலமுறை சமர்ப்பிக்க வேண்டியதில்லை.

– புதிய விதியின் கீழ், முதலீட்டாளர்கள் இப்போது தங்கள் டெபாசிட்டரிக்கு (NSDL அல்லது CDSL) ஒருமுறை மட்டுமே படிவம் 15H–ஐ சமர்ப்பித்தால் போதும்.

– முதலீட்டாளர் முதலீடு செய்துள்ள அனைத்து நிறுவனங்கள் மற்றும் பத்திரங்களை வெளியிடும் நிறுவனங்களுக்கு இந்தத் தகவலை டெபாசிட்டரி தானாகவே அனுப்பும்.

– இந்த மாற்றம் முதன்மையாக டிமேட் கணக்கில் உள்ள முதலீடுகளுக்குப் பொருந்தும்.

## தமிழ்நாடு காவல்துறையில் 13 அதிகாரிகள் பணியிட மாற்றம்....!

சென்னை, பிப். 07–

தமிழ்நாடு காவல்துறையில் 13 அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டு உள்ளது.




இதுதொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில், 13 ஐபிஎஸ் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு, இடமாற்றம் மற்றும் புதிய நியமனங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த மாற்ற ங்கள் உடனடியாக அமலுக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:–

*கும்பகோணம் துணை காவல் கண்காணிப்பாளராக இருந்த அங்கித் சிங், ஐபிஎஸ், காவல் கண்காணிப்பாளர் பதவிக்கு உயர்த்தப்பட்டு, வடக்கு சேலம் மாநகர காவல் துணை ஆணை யராக நியமிக்கப்பட்டுள்ளார்.

*பொள்ளாச்சி துணை காவல் கண்காணிப்பாளராக பணியாற்றிய ஸ்ரிஷ்டி சிங், ஐபிஎஸ், தெற்கு திருச்சி மாநகர காவல் துணை ஆணையராக மாற்றப்பட்டுள்ளார்.

*தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரிய ஐஜி ராஜேஸ்வரி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு பிரிவு ஐஜி ஆக நியமிக்க ப்பட்டுள்ளார்.

*பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு பிரிவு ஐஜி கயல்விழி தமிழ்நாடு சீரடை பணியாளர் தேர்வு வாரிய ஐஜி ஆக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

*காத்திருப்பு பட்டியலில் இருந்த ஆர். வி. ரம்யா பாரதி, ஐபிஎஸ், சென்னை குற்றப்பிரிவின் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ளார்.

*வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளராக இருந்த ஏ. மயில்வாகனன், ஐபிஎஸ், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு தெற்கு மண்டல காவல் கண்காணிப்பாளராக மாற்ற ப்பட்டுள்ளார்.

*சேலம் வடக்கு துணை கமிஷனர் சிவராமன் வேலூர் எஸ்பி ஆகவும்

*திருச்சி தெற்கு துணை கமிஷனர் டி. ஈஸ்வரன் ஆவடி போலீஸ் துணை கமிஷனர் ஆகவும்

*ரயில்லே எஸ்பி ஐ. ஈஸ்வரன் கோயம்பேடு துணை கமிஷனர் ஆகவும் *கோயம்பேடு துணை கமிஷனர் சுஜித் குமார் சென்னை மேற்கு போக்கு வரத்து துணை கமிஷனர் ஆகவும் *சென்னை மேற்கு போக்குவரத்து துணை கமிஷனர் சுஹாசினி தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரிய எஸ்பி ஆகவும் *தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரிய எஸ்பி நாகஜோதி போலீஸ் பயிற்சி பள்ளி எஸ்பி/ முதல்வர் ஆகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## காத்திருக்கும் போராட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர்!

வையப்பமலை. பிப். 07–




திருச்செங்கோடு வட்டம். மல்லசமுத்திரம் ஒன்றியம் வையப்பமலை அருகே மரப்பறை ஊராட்சி அலுவலகம் முன்பு மரப்பறை கிராமத்தில் குடியிருந்து வரும் மக்களுக்கு வழங்கப்பட்ட பட்டாக்களை கிராம கணினி கணக்கில் பதிவேற்றம் செய்ய வேண்டும். புதிய ரேஷன் கார்டு பெற ஊராட்சியில் உள்ள குடும்பங்களுக்கு வீட்டு வரி ரசீது வழங்காமல் இருப்பதை கண்டித்தும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் காத்திருக்கும் போராட்டம் கிழக்கு ஒன்றிய செயலாளர் வீ. தேவராஜன் தலைமையில் நடைபெற்றது. போராட்டத்தை கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினர் எஸ்.தமிழ்மணி துவக்கி வைத்து பேசினார். போராட்டத்தை வாழ்த்தி எலச்சிபாளையம் முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் சு.சுரேஷ். கோரிக்கைகளை விளக்கி பேசினார். சிபிஎம் மாவட்ட குழு உறுப்பினர் கோ. பழனியம்மாள். ஒன்றிய குழு உறுப்பினர்கள் பூபதிமுருகன். மோகனப்பிரியா.விஜய். மற்றும் மாற்றுத்திறனாளிகள் சங்கத் தலைவர் பொன்னுசாமி. கிளைச் செயலாளர் சாந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



இஸ்மாயில் லக்கி
டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881

## வேலை வாய்ப்பு

### பி.எஸ்.என்.எல். 120 காலியிடங்கள் –படிப்பு: பி.ஈ. சி.ஏ, சி.எம்.ஏ.




Organization Name: Bharat Sanchar Nigam Limited (BSNL)

Notification No: BSNLCO–11/12(11)/1/2025–RECTT–CO–Part (1)

Job Category: Central Govt Jobs

Employment Type: Regular Basis

Total No of Vacancies: 120 Senior Executive Trainee Posts

Place of Posting: All Over India

Starting Date: 05.02.2026 @ 10.00 AM

Last Date: 07.03.2026 @ 10.00 AM

Apply Mode: Online

Official Website: https://bsnl.co.in/

Educational Qualification for BSNL:

Recruitment services

1. Senior Executive Trainee (DR) Telecom Stream Bachelor of Engineering / Bachelor of Technology degree or equivalent engineering Graduate with minimum 60% (Sixty Percentage)marks on a regular full time basis in any of the following Streams:

Electronics and telecommunication

Electronics

Computer Science

Information Technology

Electrical

Instrumentation Or Combination of these Streams as core with other associated emerging branches.

2. Senior Executive Trainee (DR) Finance Stream Charted Accountant (CA)

Cost and Management Accountancy (CMA)

Age Limit for BSNL: (As on 07.03.2026)

Candidate should be minimum 21 years and not exceed 30 years

### காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பயணம் செய்த

## துபே சகோதரர்களுக்கு மதுரை காந்தி அருங்காட்சியகத்தில் வரவேற்பு!



மதுரை, பிப். 07–

ஆனந்துத்து துபே தேவேந்திர துபே, 70வயதுக்கு மேற்பட்ட இருவரும் சகோதரர்கள். ஆனந்த் துபே மருத்துவராகவும் தேவேந்திர துபே ஆசிரியராகவும் உள்ளனர். இவர்கள் இருவரும் காஷ்மீரில் இருந்து கன்னியாகுமரி வரை சைக்கிளில் விழிப்புணர்வு பயணம் மேற்கொண்டனர். இன்று மதுரை அருங்காட்சியகத்துக்கு வந்து விழிப்புணர்வு பயணத்தை நிறைவு செய்தனர். துபே சகோதரர்கள் இருவரும் உலக அமைதிக்காகவும், சுற்றுச்சூழலை பாதுகாத்திடவும், மழைநீர் சேகரிப்பை வலியுறுத்தியும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக 5000 கிலோ மீட்டர் சைக்கிளில் விழிப்புணர்வு பயணம் மேற்கொண்டனர்.

டிசம்பர் 25 காஷ்மீரில் புறப்பட்ட இவர்கள் இருவரும் பல்வேறு மாநிலங்களுக்கு சென்று விழிப்புணர்வு ஏற்படுத்திய நிலையில் இன்று மதுரை காந்தி அருங்காட்சியகத்திற்கு வருகை புரிந்து காந்தியின் திருவருள்வ சிலைக்கு மாலை அணிவித்து வந்தே மாதரம் கோஷம் எழுப்பி பயணத்தை நிறைவு செய்தனர். மதுரை வந்த அவர்களை அருங்காட்சியக செயலாளர் நந்தாராவ், கல்வி அலுவலர் நடராஜன் மற்றும் அனுஷத்தின் அனுக்கிரக நிறுவனரும் மற்றும் பாரதி யுவகேந்திரா அமைப்பின் நிறுவனருமான நெல்லை பாலு ஆகியோர் இருவரையும் மாலை அணிவித்து வரவேற்றனர். ஆனந்த துபே செய்தியாளர்களிடம் கூறும்போது:–

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை செல்லும் இடங்களில் எல்லாம் எல்லாம் மரங்கள் வளர்க்க வலியுறுத்தியும், மரங்களை வளர்ப்பதால் வெப்பத்தின் தாக்கம் குறையும், சுற்றுச்சூழல் மாசுபாடு அடையாமல் இருக்கும், மழை பொழியும் என்றனர். தொடர்ந்து பேசிய அவர்கள் நமது இந்திய திருநாட்டில் 21 நதிகளுடைய தண்ணீரின் அளவு மிகவும் குறைந்துள்ளது. சுற்றுச்சூழல் மாறுபாடு காரணமாகவும் வெப்பத்தின் தாக்கம் அதிகரித்ததின் காரணமாகவும் தண்ணீரின் அளவு மிகவும் குறைந்துள்ளதாகவும் தெரிவித்தார். அதோடு பாரத பிரதமர் மோடி அவர்களால் கொண்டுவரப்பட்ட ஜல்ஜீவன் மிஷன் என்கிற திட்டம் ஒரு சிறப்பான நீர் மேலாண்மைக்கான திட்டமாக பார்க்கிறோம் என்றனர். தமிழ்நாட்டில் கன்னியாகுமரி சென்று விவேகானந்தரை பார்த்த போது ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டதாக கூறினர். அதோடு இந்த சைக்கிள் பயணத்தால் 15 கிலோ உடல் எடை குறைந்ததாகவும், ஆரோக்கியமாக இருப்பதாகவும் கூறினர்.



# மலேசியா புறப்பட்டு சென்றார் பிரதமர் மோடி!



மலேசியா, பிப். 07– பிரதமர் மோடி இரண்டு நாள் பயணமாக இன்று மலேசியா புறப்பட்டு சென்றார். இந்த சுற்றுப்பயணத்தின்போது மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிம் உடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

இதுதொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், எனது நண்பரும் மலேசியப் பிரதமருமான அன்வர் இப்ராஹிமின் அழைப்பின்பேரில் மலேசியா செல்கிறேன். அன்வர் இப்ராகிமுடனான பேச்சுவார்த்தை மூலம் இருநாடுகளுக்கிடையே ஏற்பட போகும் வலுவான உறவை எதிர்பார்த்துள்ளேன். இந்தப் பயணம் நமது விரிவான மூலோபாய கூட்டாண்மையை அதிகரிக்கும் மற்றும் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்தும். மலேசியா துடிப்பான இந்திய புலம்பெயர்ந்தோரின் தாயகமாகும். அங்கு நமது புலம்பெயர்ந்தோருடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு எனக்கு கிடைக்கும் என்று பதிவிட்டுள்ளார்.

பிரதமர் மோடியின் மலேசியப் பயணத்தின்போது செமிகண்டக்டர் துறையில் இணைந்து செயல்பட ஒப்பந்தம் கையெழுத்தாகிறது.



தமிழறிஞர் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மாவட்டம் சாத்தமங்கலம் மணிமண்டபத்தில் உள்ள அன்னாரது திருவுருவசிலைக்கு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாலையணிவித்து மரியாதை செலுத்தினார். மாவட்ட ஆட்சித் தலைவர் .கே.ஜே.பிரவீன் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி (மதுரை வடக்கு), மு.பூமிநாதன் (மதுரை தெற்கு), மாநகராட்சி துணை மேயர் நாகராஜன் ஆகியோர் உடன் உள்ளனர்.

# இந்தியா மீதான 25% வரி ரத்து அமல்!



அமெரிக்கா, பிப். 07– ரஷிய எண்ணெய் வாங்குவதற்கு எதிராக இந்தியா மீது விதித்த 25% அபராத வரியை ரத்து செய்யும் உத்தரவில் அமெரிக்க அதிபர் டிரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.

இந்தியா மீண்டும் ரஷிய எண்ணெயை வாங்கினால் வரிகள் விதிக்கப்படும் என்றும், அமெரிக்காவிடம் எண்ணெய் வாங்க ஒப்புக்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இந்தியா மீது 50%ஆக இருந்த வரி தற்போது 18% குறைக்கப்பட்டுள்ளது.

இருநாட்டு வர்த்தக ஒப்பந்தம் குறித்த கூட்டறிக்கையும் வெளியானது. இடைக்கால ஒப்பந்தம் குறித்த கூட்டறிக்கையை அமெரிக்கா சார்பில் வெள்ளை மாளிகை வெளியிட்டது.

இடைக்கால ஒப்பந்த அம்சங்களை மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டார்.

அதில், இந்தியாவில் இருந்து 30 டிரில்லியன் டாலர் அளவுக்கு ஏற்றுமதிக்கு வழிவகுக்கும் என்று மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார். மேலும், இந்திய பொருட்களுக்கு அமெரிக்கா 18 சதவீத இறக்குமதி வரி விதிக்கும். அமெரிக்காவில் இருந்து இறக்குமதியாகும் தானியக் கழிவுகள், கால்நடை தீவனங்களுக்கு வரிகுறைப்பு.

அமெரிக்காவில் இருந்து இறக்குமதியாகும் விவசாயப் பொருட்களுக்கான வரியும் குறைக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# தமிழகத்தில் வெப்பநிலை உயரும்; வானிலை ஆய்வு மையம்!

சென்னை, பிப். 07– சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. லட்சத்தீவு மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.



தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். வட தமிழக கடலோர மாவட்டங்கள், நீலகிரி, திண்டுக்கல், சேலம், ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை மாவட்டங்கள் மற்றும் புதுவையில் ஒரிரு இடங்களில் அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும்.

8–ந்தேதி தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். வட தமிழக கடலோர மாவட்டங்கள், நீலகிரி, திண்டுக்கல், சேலம், ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர், வேலூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்க ளில் ஒரிரு இடங்களில் அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும்.

9 மற்றும் 10–ந்தேதிகளில் தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். நீலகிரி, திண்டுக்கல், சேலம், ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர், வேலூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும். இதனிடையே இன்று முதல் 10–ந்தேதி வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை ஒரிரு இடங்களில் 1–2° செல்சியஸ் வரை படிப்படியாக உயரக்கூடும்.சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 30° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 21° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். நாளை வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சசிகலாவை சந்தித்த நிர்வாகி; கட்சியில் இருந்து நீக்கிய டிடிவி தினகரன்!

சென்னை, பிப். 07– சென்னை போயஸ் கார்டனில் உள்ள சசிகலாவின் வீட்டில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் அமமுக மாணவர் அணி செயலாளராக இருந்த ஜீவிதா நாச்சியார் கலந்து கொண்டார்.



மதுரையில் அமமுகவின் முகமாக அறியப்படும் ஜீவிதா நாச்சியார், சசிகலாவின் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டது டிடிவி தினகரனையும், அமமுகவினரையும் கடும் அதிருப்தியில் ஆழ்த்தியதாக கூறப்படுகிறது. இதற்கு உடனடியாக எதிர்வினையாற்றும் விதமாக ஜீவிதா நாச்சியாரை கட்சியில் இருந்தும் நீக்கி டிடிவி தினகரன் நடவடிக்கை எடுத்தார்.

அமமுக கொள்கை, குறிக்கோள், கோட்பாடுகளுக்கு முரணாக செயல்பட்ட தாகக்கூறி மாணவியர் அணி செயலாளர் ஜீவிதா நாச்சியார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக தனது சமூக வலைதள பக்கத்தில் "துரோகம் வேர் அறுக்கப்படும்" என ஜீவிதா நாச்சியார் பதிவிட்டுள்ளார்.

# விருப்ப மனு - நேரில் வர வேண்டாம் - என்.ஆனந்த் அறிவிப்பு!

சென்னை, பிப். 07– தவெக விருப்ப மனு பெற யாரும் நேரில் வரவேண்டாம் என என்.ஆனந்த் அறிவித்துள்ளார். தமிழக வெற்றிக் கழகம் சார்பில் தேர்தலில் போட்டியிட விருப்பவோருக்கு நேற்று (பிப்.6) முதல் விருப்ப மனு விநியோகம் செய்யப்படும் நிலையில் பொதுச் செயலாளர் என். ஆனந்த் இந்த அறி விப்பை வெளியிட்டுள்ளார்.


இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், கழகத் தோழர்களுக்கு வணக்கம், வெற்றித் தலைவர் அவர்களின் ஆசியோடும் ஆதரவோடும் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில், வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் போட்டியிட விரும்பும் கழகத் தோழர்கள், கழகத் தலைமை நிலையச் செயலகத்தில் விருப்ப மனுக்களைப் பெற்று, பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கழகத் தலைமை நிலையச் செயலகம் இருக்கும் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் எவ்வித இட நெருக்கடியும் ஏற்படக் கூடாது என்பதை முழுமையாகக் கவனத்தில் கொண்டுள்ளோம். எனவே, மக்கள் மீது அதிக அக்கறை கொண்ட நம் வெற்றித் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, விருப்ப மனுக்களைப் பெறுவதற்காகக் கழகத் தோழர்கள் யாரும் தலைமை நிலையச் செயலகத்திற்கு வர வேண்டாம் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.



எனவே, விருப்ப மனு பெற விரும்பும் கழகத் தோழர்கள், பின்வரும் இணைப்பைப் பயன்படுத்திப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. https://drive.google.com/file/d/1Y9PfGCXvzVTbJ6B-6S128PKJZE7IaWgiK

இந்த இணைப்பின் வாயிலாக விருப்ப மனுவைப் பதிவிறக்கம் செய்ய லாம். அதில் கேட்கப்பட்டுள்ள விவரங்களை முழுமையாகப் பூர்த்தி செய்து, உரிய ஆவணங்களை இணைக்க வேண்டும். இவற்றை ஏற்கெனவே குறிப்பிட்ட தேதியான பிப்ரவரி 14ஆம் தேதிக்குள் நேரிலோ, கொரியர் / தபால் மூலமோ அனுப்பலாம் என்று கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி கேட்டுக்கொள்கிறோம்' என்று தெரிவித்திருக்கிறார். தவெக விருப்பமனு அளிக்க பொதுத் தொகுதிக்கு ரூ.10,000, தனித் தொகுதிக்கு ரூ.5,000 என கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.



# தொடர்ந்து உச்சத்தில் தங்கம், வெள்ளி விலை!

சென்னை, பிப். 07– சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,360 உயர்ந்து ரூ.1,15,360–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.170 உயர்ந்து ரூ.14,420–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்தை போன்று வெள்ளி விலையும் இன்று உயர்ந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.5 உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.285–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# பாகிஸ்தான் மசூதி குண்டுவெடிப்பு: பலி எண்ணிக்கை 69 ஆக அதிகரிப்பு!

இஸ்லாமாபாத், பிப். 07– பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் உள்ள கதீஜா துல் குப்ரா மசூதியில் நேற்று மக்கள் அதிகம் கூடியிருந்த சமயம் குண்டுவெடிப்பு நிகழ்ந்தது.



சந்தேக நபர் ஒருவர் மசூதி வாயில் அருகே தடுத்து நிறுத்தப்பட்டபோது தன் உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்கச் செய்தார். குண்டு வெடிப்பு தாக்கத்தால் கட்டிடத்தின் ஒரு பகுதி சேதமடைந்தது. அங்கு மீட்புப் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.

இதையடுத்து, இஸ்லாமாபாத் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. காவல்துறையினர், பாதுகாப்புப் படையினர் அங்கு குவிக்கப்பட்டனர்.

இந்நிலையில், பாகிஸ்தான் மசூதியில் நடந்த தற்கொலைப் படைத் தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 69 ஆக அதிகரித்துள்ளது. மேலும், 170–க்கும் அதிகமானோர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என உள்ளூர் செய்தி ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இதனால்பலிஎண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது.

# சபரிமலை தங்கம் கொள்ளை வழக்கில் ஜெயராமுக்கு அமலாக்கத்துறை நோட்டீஸ்!



திருவனந்தபுரம், பிப். 07– சபரிமலை தங்கம் கொள்ளை வழக்கில், விசாரணைக்கு ஆஜராகுமாறு மலையாள பிரபல நடிகர் ஜெயராமுக்கு அமலாக்கத்துறையினர் நோட்டீஸ் அனுப்பி உள்ளனர்.

மேலும் உன்னிகிருஷ்ணன் போற்றியிடம் விசாரணை நடத்தவும் நோட்டீஸ் அனுப்பப்பட்டு உள்ளது. அவர் சமீபத்தில் ஜாமின் பெற்று திருவனந்தபுரம் சிறையில் இருந்து வெளியே வந்தது குறிப்பிடத்தக்கது.

உன்னிகிருஷ்ணன் போற்றி மீது துவார பாலகர் சிலைகள் மற்றும் சபரிமலை சன்னதி படிகளில் இருந்து தங்கத்தை பிரித்து எடுத்து கொள்ளையடித்ததாக குற்றம்சாட்டப்பட்டு இருந்தது. அத்துடன் கர்நாடக மாநிலம் பெல்லாரியை சேர்ந்த நகைக்கடை உரிமையாளரான கோவர்தன் மற்றும் சென்னையை சேர்ந்த தனியார் நிறுவன தலைமை செயல் அதிகாரி பங்கஜ் பண்டாரி ஆகியோருடன் இணைந்து இந்த செயலில் ஈடுபட்டது விசாரணையில் தெரியவந்தது.

மேலும் உன்னிகிருஷ்ணன் போற்றி, சென்னையில் உள்ள நடிகர் ஜெயராம் வீட்டில் பூஜைகளை செய்ததாகவும், அங்கு சபரிமலையில் இருந்து கொண்டு சென்ற தங்க கவசங்களை வைத்து வழிபாடு செய்ததாகவும் புகார் எழுந்தது.

இந்த சம்பவத்தில் எனக்கு எந்த தொடர்பும் இல்லை என்று ஏற்கனவே நடிகர் ஜெயராம் தெரிவித்து இருந்தார். சமீபத்தில் அவரிடம் சென்னையில் உள்ள வீட்டில் வைத்து சிறப்பு விசாரணை குழுவினர் விசாரணை நடத்தி இருந்தனர். தற்போது விசாரணைக்கு ஆஜராகுமாறு அமலாக்கத்துறையினர் நோட்டீஸ் அனுப்பி உள்ளனர். இதன் மூலம் வருகிற நாட்களில் நடிகர் ஜெயராம் கொச்சி அமலாக்கத்துறை அலுவலகத்தில் ஆஜராக உள்ளதாக தெரிகிறது.


## தேவை

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:
செல் : 7904806432
போன்: 0452 – 4916699


# குடிநீர் பாட்டில்களில் மைக்ரோ பிளாஸ்டிக் கலப்பு; மத்திய அரசு தகவல்!

சென்னை, பிப். 07– 'குடிநீர் பாட்டில்களிலும், 'மைக்ரோ பிளாஸ்டிக்' துகள்கள் கலந்திருப்பது, கண்டறியப்பட்டு உள்ளது' என, மத்திய அரசு,



சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

பிறந்த குழந்தைகளின் நஞ்சுக்கொடியில், மைக்ரோ பிளாஸ்டிக் எனும் பிளாஸ்டிக் நுண்துகள்கள் கண்டறியப்பட்டதாக, செய்திகள் வெளியாகின. இது தொடர்பாக, சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் என்.சதீஷ்குமார், டி.பரத சக்கரவர்த்தி அடங்கிய சிறப்பு அமர்வு, தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது, மத்திய சுகாதார அமைச்சகம் சார்பில், வழக்கறிஞர் வே.சந்திரசேகரன் ஆஜராகி, இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர ஆணையத்தின் அறிக்கையை தாக்கல் செய்தார். அதில் கூறப்பட்டிருந்ததாவது:–

ஹிமாச்சல் பிரதேசம், ராஜஸ்தான், சண்டிகர், ஹரியானா, கர்நாடகா மற்றும் மஹாராஷ்டிரா மாநிலங்களில், குடிநீர் பாட்டில்களின் மாதிரிகள், ஆய்வு செய்யப்பட்டன. இதில், மைக்ரோ பிளாஸ்டிக் இருப்பது கண்டறியப்பட்டு உள்ளது. அதேபோல், பிளாஸ்டிக் பாக்கெட்டுகளில் பொதிந்து விற்கப்படும் உப்பு, சர்க்கரையிலும், மைக்ரோ பிளாஸ்டிக் கண்டறியப்பட்டு உள்ளது. பாக்கெட்டுகளில் பொதிந்து விற்கப்படும் உப்பு, சர்க்கரையை உண்ணுவதால், உடல் நலத்தில் ஏற்படும் பாதிப்பு குறித்து, கூட்டம் நடத்தப்பட்டு உள்ளது. ஆய்வுகள் விரைவில் முடிக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது. இதை பார்வையிட்ட நீதிபதிகள், 'குடிநீர் பாட்டில்களில் எச்சரிக்கை வாசகங்கள் இடம்பெறச் செய்ய, குடிநீர் பாட்டில் உற்பத்தி நிறுவனங்களுக்கு அறிவுறுத்த வேண்டும்' என உத்தரவிட்டு, விசாரணையை தள்ளி வைத்தனர்.

# பறவைக் காய்ச்சல் எதிரொலி: கோழிப்பண்ணைகளில் தீவிர பாதுகாப்பு நடவடிக்கை!

சென்னை, பிப். 07– சென்னை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் இறந்த காகங்களை பறவைக் காய்ச்சல் தாக்கியுள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது.



இது பறவைகளிடையே விரைவாகப் பரவக்கூடியது. பறவைக் காய்ச்சலை உருவாக்கும் எச்5என்1 வைரஸ் கிருமிகள் குறிப்பாக இடம் விட்டு இடம் பறக்கும் புறா, காகம், கொக்கு, நாரை போன்ற பறவைகளால் அதிகமாக பரப்பப்படுகிறது.

மேலும், அவை வீடுகள் மற்றும் பண்ணைகளில் வளர்க்கப்படும் வாத்துகள் மற்றும் கோழிகளுக்கும் பரவுகிறது. சில நேரங்களில் மனிதர்கள் மற்றும் பிற பாலூட்டிகளிலும் பரவக்கூடும். தொற்றுநோய் பரவலைத் தடுக்க தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை, மாநிலம் முழுவதும் கண்காணிப்பை மேம்படுத்தவும், பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும் உத்தரவிட்டுள்ளது.

நாமக்கல், சேலம், ஈரோடு உள்பட நாமக்கல் மண்டலத்தில் சுமார் 1,000 கோழிப்பண்ணைகளில் 6 கோடிக்கும் அதிகமான முட்டை கோழிகள் வளர்க்கப்படுகின்றன. 2 கோடிக்கும் அதிகமான பிராய்லர் கோழிகள் வளர்க்கப்படுகின்றன.

இந்தநிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கோழிப் பண்ணைகளில் வெளியாட்கள் மற்றும் வாகனங்கள் நுழைவதற்கு தடை செய்யப்பட்டு, உயிரி பாதுகாப்பு (பயோ செக்யூரிட்டி) நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர். பண்ணை வளாகங்களில் கிருமி நாசினி மருந்துகள் தெளிக்கப்படுகிறது. நாமக்கல் மண்டலத்தில் சுகாதாரமான முறையில் கோழிப்பண்ணைகளை அமைத்து நடத்தி வருவதாலும், சென்னையில் இருந்து நாமக்கல்லுக்கோ, நாமக்கல்லில் இருந்து சென்னைக்கோ கோழிப்பண்ணை சம்மந்தமான முட்டை, தீவனம் போன்ற பொருட்கள் போக்குவரத்து நடைபெறுவதில்லை.

இதனால் நாமக்கல் மண்டலத்தில் பறவைக்காய்ச்சல் தொற்று நோய் பரவ வாய்ப்பில்லை என பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020